இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 01-10-2025

# பழிபோடும் பழனிசாமி!

**தூத்துக்குடியில் அமைதியாக ஊர்வலம் சென்று கொண்டிருந்தவர்கள் மீது தடியடி நடத்திக் கலைத்து 13 பேரைச் சுட்டுக் கொல்ல உத்தரவிட்ட கொலைபாதகச் செயலுக்குக் காரணமான எடப்பாடி பழனிசாமி, கரூர் விவகாரத்தில் காவல் துறையின் மீது பழிபோடுவது அவரது குரூர அரசியலின் கீழ்த்தரமான புத்தியையே காட்டுகிறது.**

"அ.தி.மு.க. அரசாங்கம் இருக்கும் போது பல்லாயிரக்கணக்கான போராட்டங்கள் நடந்திருக்கின்றன, ஒவ்வொரு கூட்டங்களுக்கும் நாங்கள் உரிய பாதுகாப்பளித்தோம்" என்று பேட்டி கொடுத்திருக்கிறார் பழனிசாமி.

13 பேர் துப்பாக்கிச் சூட்டில் பலியானபிறகு, 'அதை டி.வி.யில் பார்த்துத் தான் தெரிந்து கொண்டேன்' என்று சிரித்தபடியே சொன்னவர்தான் இந்த பழனிசாமி.

தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு தொடர்பாக விசாரிக்க அமைக்கப்பட்ட நீதியரசர் அருணா ஜெகதீசன் ஆணையம் முழு உண்மையை அம்பலப் படுத்தி விட்டது. பழனிசாமிக்குத் தெரிந்தே தான் அந்தக் கொலைகள் அரங்கேற்றப்பட்டதாக அந்த ஆணையமே சொல்லியது. அறிக்கையின் 2 ஆவது பாகம் - 219 ஆவது பக்கத்தில் இடம் பெற்றுள்ள 252 ஆவது கருத்து இது:

" .....have been updating the Chief Minister Tr. Edapadi K. Palanisamy with minute to minute development which took place in Thoothukudi and as such to say that the then Chief Minister come to know of the shooting only through the media would be incorrect or inaccurate - the Commission would opine" என்று சொல்லி இருக்கிறது அந்த அறிக்கை.

**"தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு சம்பவம் பற்றி அப்போதைய முதல் அமைச்சர் எடப்பாடி பழனிசாமி, 'அந்த சம்பவத்தை மற்றவர்களைப் போல ஊடகங்களில் வந்த செய்தி மூலம் அறிந்து கொண்டேன்' என்று பத்திரிக்கையாளர்களுக்கு பேட்டி அளித்தார். ஆனால் இந்த ஆணையத்திடம் மிக வலுவாக இருக்கும் ஆதாரம் என்னவென்றால், சாட்சியாக விசாரிக்கப்பட்ட அப்போதைய தலைமைச் செயலாளர் கிரிஜா வைத்தியநாதன், அப்போதைய டி.ஜி.பி. ராஜேந்திரன், அப்போதைய உளவுத்துறை ஐ.ஜி. சத்தியமூர்த்தி ஆகியோர் தூத்துக்குடியில் நடக்கும் சம்பவங்களையும், அங்குள்ள நிலவரங்களையும் நிமிடத்துக்கு நிமிடம் எடப்பாடி பழனிசாமியிடம் தெரிவித்து வந்ததாகக் கூறினார்கள். எனவே, ஊடகங்கள் மூலமாகத்தான் அந்தச் சம்பவம் பற்றி தெரிந்து கொண்டதாக எடப்பாடி பழனிசாமி கூறியது தவறான கருத்து என்பது இந்த ஆணையத்தின் கருத்தாகும்"** - என்று ஆணையத்தின் அறிக்கை சொல்கிறது. இப்படிப்பட்ட பழனிசாமிதான், இன்று மகா யோக்கியரைப் போல பேட்டி தருகிறார்.

சாத்தான்குளத்தில் தந்தையையும் மகனையும் காவல் நிலையத்தில் வைத்து கொன்று விட்டு, 'உடல் நலக் குறைவால் மரணம்' என்று அறிக்கை விட்டது பழனிசாமியின் அரசு என்பதை மக்கள் மறந்துவிடவில்லை. **'பென்னிக்ஸ் மூச்சுத் திணறலால் இறந்தார், ஜெயராஜ் உடல் நலம் பாதிக்கப்பட்டு இறந்தார்'** என்றும் அறிக்கை வெளியிட்டார் அன்றைய முதலமைச்சர் பழனிசாமி. அவர்தான் இன்று மகா யோக்கியரைப் போல பேட்டி தருகிறார்.

**விஜய் தனது கூட்டத்துக்கு காவல் துறை சொல்லும் எந்தக் கட்டுப்பாடுகளையும் பின்பற்றுவது இல்லை. கூட்டம் கூட்டிக் காண்பிப்பதற்காக நெருக்கமான சாலைகளைக் கேட்பதும், கூட்டம் கூட வேண்டும் என்பதற்காக 8 மணி நேரம் கழித்து வருவதும், சுற்றிலும் மரங்களிலும் வீடுகளின் மேலும், ஆபத்தான மின்விளக்கு கம்பங்களின் மீதும், கோவில் கோபுரங்களின் மீதும் ரசிகர்கள் நிற்பதைப் பார்த்து ரசிப்பதும் என ஒரு கூட்டத்துக்கான எந்த இலக்கணமும் இல்லாமல் தலைக்கனமாக நடந்து கொண்டதன் விளைவு தான் அப்பாவி மக்கள் 41 பேர் மூச்சுத்திணறலால் மரணம் அடைந்த மாபெரும் சோகம் ஆகும். இதில் கூட பழனிசாமி தனது பச்சை சந்தர்ப்பவாத அரசியலைச் செய்கிறார்.**

"நான் ஊடகங்களில் பார்க்கின்ற போது உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் இல்லை என்பது தெளிவாக தெரிகிறது. முந்தைய பரப்புரைகளின் போதும் காவல்துறை உரிய பாதுகாப்பை கொடுக்கவில்லை என்பது தெளிவாக தெரிந்தது" என்று சொல்லி இருக்கிறார் பழனிசாமி.

சம்பவ இடத்தில் 500 காவலர்கள் இருந்துள்ளார்கள். பத்தாயிரம் பேர் வருவார்கள் என்று சொல்லி இடம் வாங்கிவிட்டு, 27 ஆயிரம் பேரைக் கூட்டியது யார் தவறு? விஜய் கட்சியினர் முன்பு கேட்ட இடம் குறுகலானது என்பதால் பெரிய இடத்தை காவல் துறை கொடுத்துள்ளது. அந்த இடத்தை முறையாகப் பயன்படுத்தாதது யார் தவறு? எட்டு மணி நேரமாக காத்திருப்பவர்களுக்கு தண்ணீர் இல்லை, உணவு இல்லை. வெளியே செல்வதற்கு யாரையும் அனுமதிக்கவில்லை. 'நான் வெளியே போகணும்னு சொன்னேன். ஆனால் விட மாட்டேன்னு அவரு கட்சிக் காரங்க சொல்லிட்டாங்க. எங்களை சுத்தி கயிறு போட்டு கட்டிட்டாங்க' என்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் ஒரு பெண் கதறியபடி சொல்கிறார். இதெல்லாம் யார் தவறு?

சந்தடி சாக்கில், தனது கூட்டத்துக்கும் பாதுகாப்பு இல்லை என்று பழனிசாமி சொல்கிறார். பழனிசாமிக்கு கூட்டமே கூடுவது இல்லை. அவரது பச்சை பஸ்ஸை பார்த்தாலே மக்கள் ஓடுகிறார்கள். இவர் பேசத் தொடங்கியதும் மக்கள் கலைகிறார்கள். பெரும்பாலும் காலியான சாலைகளில்தான் பழனிசாமி செல்கிறார். பல இடங்களில் அவருக்கு கருப்புக் கொடி காட்டுகிறார்கள். சொந்தக் கட்சிக்காரர்களே கருப்புக் கொடி காட்டுவதாகத்தான் அவரது பயணங்கள் அமைந்துள்ளன. 'இந்தக் கேவலம் தேவையா?' என்பதைப் போலத்தான் பழனிசாமியின் பஸ் பயணங்கள் அமைந்துள்ளன. ஆனாலும் வெட்கமே இல்லாமல், 'எனக்கும் பாதுகாப்பு இல்லை' என்கிறார் பழனிசாமி.

**ஒருவேளை காவல் துறையினரை அதிகமாக நிறுத்தி கூட்டம் கூட்டி காட்ட நினைக்கிறாரா பழனிசாமி?**

## முனைவர் பி.பழனியப்பன் தலைமை!

# தருமபுரி மேற்கு - கலைஞர் நூலக 3ஆம் ஆண்டு விழா!

தருமபுரி, அக். 1 -

தருமபுரி மேற்கு மாவட்டம் செட்டிகரையில் அமைந்துள்ள கலைஞர் நூலகத்தின் மூன்றாம் ஆண்டு தொடக்க விழா - தி.மு.க. மாவட்டச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் தலைமையில் நடைபெற்றது.

தருமபுரி மேற்கு மாவட்டம், செட்டிகரையில் தி.மு.க. இளைஞர் செயலாளர் -துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட செட்டிகரை கலைஞர் நூலகம் தற்போது அப்பகுதி மாணவ மாணவியர், அரசு போட்டி தேர்வுகளுக்கு தயாராகி வருபவர்கள் என பலருக்கும் பயன்படும் வகையில் கடந்த 2 ஆண்டுகளாக சிறப்பாக செயலாற்றி வருகிறது.

இந்நூலகத்தின் 3ம் ஆண்டு துவக்க விழா தருமபுரி மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.சிவகுரு ஏற்பாட்டில் தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், மேனாள் அமைச்சர், முனைவர் பி.பழனியப்பன் தலைமையில் நடைபெற்றது.

கிராமப்புறங்களில் வசிக்கும் ஏழை, எளிய மாணவிகள், மாணவர்கள் பயனடையும் வகையில் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதியில் செட்டிகரையில் அமைந்துள்ள இந்த கலைஞர் நூலகம் வாயிலாக கடந்த ஆண்டு அரசு போட்டி தேர்வில் 7 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். அவர்களை பாராட்டி, நடப்பு ஆண்டு அரசு போட்டி தேர்வுக்கு இந்நூலகத்தில் படித்து தயாராகி வரும் மாணவ, மாணவிகளுக்கு தி.மு.க. மாவட்டச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் லோகேஷ் ஆகியோர் இனிப்பு வழங்கி ஊக்குவித்தனர்.

இந்நிகழ்வில் ஒன்றியச் செயலாளர்கள் சக்திவேல், மாது, பிரபுராஜசேகர், வழக்கறிஞர் அணி அமைப்பாளர் மூத்த வழக்கறிஞர் டி.சந்திரசேகர், வெற்றிவேல், மேயர் முனுசாமி, கோவிந்தராஜி, சிவா, குமரேசன், பச்சையப்பன், மதன் பாலாஜி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

'வாட்ஸ் அப்'பில் வலம் வருகிறது!




## கரூர் பிரச்சார துயரச் சம்பவம்!

# போர்க்கால அடிப்படையில் அரசு நடவடிக்கை!

## கரூர் மாவட்ட ஆட்சியர் விளக்கம்!

கரூர், அக். 1 -

கரூர் மாவட்டம் கரூரில் தமிழக வெற்றிக் கழகத் தலைவர் பிரச்சாரத்தின்போது ஏற்பட்ட துயர சம்பவத்திற்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது குறித்து மாவட்ட ஆட்சியர் விளக்கம் அளித்தார்.

கரூரில் தமிழக வெற்றிக்கழக தலைவர் பிரச்சாரத்தின்போது ஏற்பட்ட துயர சம்பவத்தில் அரசு சார்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விளக்கும் வகையில் மாவட்ட ஆட்சித்தலைவர் மீ.தங்கவேல், சட்டம் ஒழுங்கு கூடுதல் காவல்துறை தலைவர் டேவிட்சன் தேவாசீர்வாதம் முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செய்தியாளர்களை சந்தித்து விளக்கமளித்தார்.

இந்நிகழ்வில் கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் கூறியதாவது: -

கரூர் மாநகராட்சிக்குட்பட்ட வேலுச்சாமிபுரம் எனும் இடத்தில், தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் மக்கள் சந்திப்பு நிகழ்வு 27.09.2025 அன்று இரவு 7 மணிக்கு தொடங்கி நடைபெற்றது.

கூட்ட நெரிசல் காரணமாக நிகழ்வில் கூடியிருந்த மக்களில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தும், மேலும் நேற்றுவரை 40 நபர்களும், இன்றைக்கு ஒருவர் சேர்த்து 41 பேர் அந்தச் சம்பவத்தினால் இறந்ததும், அனைவருக்கும் மிகப் பெரிய துயரத்தை அளித்துள்ள ஒரு செய்தியாகும்.

**தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்திட முதல்வர் உத்தரவு!**

இந்த செய்தியை கேள்விப்பட்டவுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உடனடியாக அமைச்சர்கள், அனைத்துத் துறை அலுவலர்களையும் முடுக்கி விட்டு, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து, தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்திட உத்தரவிட்டார்.

அதனடிப்படையில் கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மற்றும் பிற தனியார் மருத்துவமனைகளுக்கு கொண்டுவரப்பட்ட காயமடைந்தவர்கள் அனைவருக்கும் தீவிர உயர் சிகிச்சைகள் சிறந்த முறையில் அளிக்கப்பட்டது.

இருப்பினும், சம்பவ இடத்திலிருந்து இறந்த நிலையில் 39 நபர்களும் மேல் சிகிச்சையில் பெற்றுக் கொண்டிருந்த இருவரும் என மொத்தம் 41 பேர் இறந்த செய்தி மிகவும் துயரமான செய்தியாக உள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரவோடு இரவாக இந்த செய்திகளைக் கேள்விப்பட்டு, இறந்த குடும்பங்களுக்கு நிவாரணமும், காயம்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு நிவாரணமும் அறிவித்து விட்டு, இரவோடு இரவாக திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் மற்றும் திருச்சி மாவட்ட ஆட்சியர் அவர்களையும் இங்கு அனுப்பி வைத்து பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டார்கள்.

மேலும், சேலம், திருச்சி, திண்டுக்கல், நாமக்கல், கோவை மற்றும் மதுரையிலிருந்து கிட்டத்தட்ட 114 மருத்துவர்கள், 23 செவிலியர்கள் உட்பட மருத்துவக்குழுக்களையும் கரூருக்கு அனுப்பி வைத்தார்கள்.

அதேபோல், பிற மாவட்டங்களில் இருந்து தடயவியல் வல்லுநர்கள் 16 பேரும், நமது மாவட்டத்தில் உள்ள 4 பேரும் தொடர் பணிகளைச் செய்து வந்தார்கள்.

கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மருத்துவர்கள் சுமார் 220 பேர் மற்றும் 115 செவிலியர்கள் உட்பட பல்வேறு மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களும் மருத்துவ சிகிச்சைப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். கரூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும், பிற தனியார் மருத்துவமனைகளிலும் கிட்டத்தட்ட 110 நபர்கள் மருத்துவ சிகிச்சையைப் பெற்று வந்தனர்.

**கட்டுப்பாட்டு அறை மற்றும் உதவி எண்கள் அறிவிப்பு!**

இந்த நிலையில் இறந்தவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூபாய் 10 லட்சமும், சிகிச்சையில் உள்ளவர்களுக்கு ரூபாய் 1 லட்சமும் அளித்து நிவாரண நிதி வழங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும் முதலமைச்சர் அவர்களும், துணை முதலமைச்சர் அவர்களும் உடனடியாக கரூருக்கு வருகை தந்து மருத்துவமனையில் சிகிச்சை பெறுபவர்களையும், அவர்களுடன் இருப்பவர்களையும் பார்த்து ஆறுதல் தெரிவித்து, இறந்தவர்களுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஒரு கட்டுப்பாட்டு அறை திறக்கப்பட்டது. யாருக்கேனும் ஏதேனும் உதவிகள் தேவைப்பட்டால் அந்த அறையில் தொடர்பு கொள்ள இங்கும் மருத்துவமனையிலும் கட்டுப்பாட்டு அறைகளும் உருவாக்கப்பட்டன.

கட்டுப்பாட்டு அறையினை தொடர்கொள்ள 04324256306, வாட்ஸ்அப் எண்7010806322 ஆகிய தொடர்பு எண்களும் அறிவிக்கப்பட்டன.

கூட்ட நெரிசலில் இறந்த 39 நபர்களுக்கும் அன்று இரவே பிரேதப் பரிசோதனை செய்து, அவர்களின் உறவினர்களிடமும் உடல்கள் பாதுகாப்பாக ஒப்படைக்கப்பட்டன.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவுகள் மற்றும் ஆணைகளின்படியும், துணை முதலமைச்சர் அவர்கள் இங்கு வருகை புரிந்து கொடுத்த வழிகாட்டுதல்களின் அடிப்படையிலும், மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவரும் அனைவருக்கும் எந்த வித குறைபாடுகளும் இல்லாமல் மருந்துகள், மாத்திரைகள் வழங்கி, தீவிர உயர் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# "அன்னம் தரும் அமுத கரங்கள் திட்டம்"!

## 02.10.25 முதல் 14.10.25 வரை நடைபெறும் இடங்களின் விவரம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர்– பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, அக். 1-

"அன்னம் தரும் அமுத கரங்கள்" கீழ்கண்ட நாட்களில் நடைபெறும் விவரம் பின்வருமாறு: -

நாள் 02.10.25 வியாழக் கிழமை, 225 ஆம் நாள்.

கொளத்தூர் கிழக்கு பகுதி

1) வட்டம் 70அ, டிக்கா குளம், மசூதி அருகில், வட்ட செயலாளர் D.சந்திரசேகர்.

2) வட்டம் 70 - சுந்தர விநாயகர் கோயில தெரு, செம்பியம் காவல்நிலையம் அருகில், வட்ட செயலாளர், பா.அன்பரசு.

நாள் 03.10.25 வெள்ளிக் கிழமை, 226 ஆம் நாள்

வில்லிவாக்கம் மேற்கு பகுதி

1) வட்டம் 95, தாந்தோணி அம்மன் கோயில் தெரு, வில்லிவாக்கம், வட்ட செயலாளர் மா.அகிலன்.

2) வட்டம் 95அ, பாரதி நகர் 2வது தெரு, வில்லி வாக்கம். வட்ட செயலாளர் பா.ஜானி.

நாள் 4.10.25 சனிக் கிழமை, 227 ஆம் நாள்

திரு.வி.க.நகர் வடக்கு பகுதி

1) வட்டம் 72, கஸ்தூரி பாய் காலனி, B.பிளாக், (போலிஸ் பூத் பின்புறம்), கன்னிகாபுரம். வட்ட செயலாளர் M.A.டிக்கா

2) வட்டம் 72அ - திரு.வி.க.நகர் 2வது தெரு, மு.க.கலைஞர் நற்பணி மன்றம் அருகில், வட்ட செயலாளர் M.Z.அபோய்

நாள் 5.10.25 ஞாயிற்றுக் கிழமை, 228 ஆம் நாள்

எழும்பூர் வடக்கு பகுதி

1) வட்டம் 99, சண்முகராயன் தெரு, பொன்னன் தெரு சந்திப்பு, வட்ட செயலாளர் R.M.ரங்கநாதன்

2) வட்டம் 99அ - புதிய பூபதி நகர், வட்ட செயலாளர் C.சேகர்

நாள் 6.10.25, திங்கட் கிழமை, 229 ஆம் நாள்

அம்பத்தூர் வடக்கு பகுதி


1) வட்டம் 80, புதூர் மெயின் ரோடு, அம்பத்தூர், வட்டசெயலாளர், வெ.இராதாகிருஷ்ணன்

2) வட்டம் 81, ஷாப் தெரு, வெங்கடாபுரம், அம்பத்தூர். வட்ட செயலாளர் மு.ரகு.

நாள் 7.10.25, செவ்வாய்கிழமை, 230 ஆம் நாள்

துறைமுகம் கிழக்கு பகுதி

1) வட்டம் 55அ, அம்மன் கோவில்தெரு, சடையப்பன் தெரு சந்திப்பு. வட்ட செயலாளர் S.புகழேந்தி



துறைமுகம் மேற்கு பகுதி

2) வட்டம் 57 அ, N.S.C.போஸ் சாலை, பத்ரியன் தெரு சந்திப்பு (பூக்கடை பஜார் அருகில்) வட்ட செயலாளர், பா.அண்ணாதுரை.

நாள் 8.10.25, புதன் கிழமை, 231 ஆம் நாள்

கொளத்தூர் மேற்கு பகுதி

1) வட்டம் 69, எஸ்.ஆர்.பி.கோயில் தெரு, அகரம். வட்ட செயலாளர் P.அதிபதி

2) வட்டம் - 69அ, G.K.M.காலனி, 2வது தெரு, வட்ட செயலாளர் - M.J.C.பாபு

நாள் 9.10.25, வியாழக் கிழமை, 232 ஆம் நாள்

அம்பத்தூர் தெற்கு பகுதி

1) வட்டம் 87, ஆசைத்தம்பி தெரு, மதியழகன் நகர், பாடி. வட்ட செயலாளர் த.பிரகாஷ்குமார்.

2) வட்டம் - 89, கோல்டன் காலனி, அவ்வை நகர் கார்னர், அம்பத்தூர். வட்ட செயலாளர் M.E. சேகர் M.C.,

நாள் 10.10.25, வெள்ளிக் கிழமை, 233 ஆம் நாள்

திரு.வி.க.நகர் தெற்கு பகுதி

1) வட்டம் 73அ, நாச்சாரம்மாள் தெரு, புளியந்தோப்பு. மினவர் அணி பகுதி அமைப்பாளர் தே.ரஞ்சித் குமார்,

2) வட்டம் 76அ, பெரம்பூர் பேரக்ஸ் ரோடு, KLP குடியிருப்பு வளாகம், பட்டாளம். வர்த்தகர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் S. சதீஷ்குமார்.

நாள் 11.10.25, சனிக் கிழமை, 234 ஆம் நாள்

எழும்பூர் தெற்கு பகுதி

1) வட்டம் 58, நேவல் மருத்துவமனை சாலை, பெரியமேடு. வட்ட செயலாளர் V.விஜயகுமார்.

2) வட்டம் 58அ, லியோ பேக்கரி அருகில், ஏ.பி.ரோடு. வட்ட செயலாளர் R.பாபு

நாள் 12.10.25, ஞாயிற்றுக் கிழமை, 235 ஆம் நாள்

வில்லிவாக்கம் கிழக்கு பகுதி

1) வட்டம் 98அ, குட்டியப்பன் முதல் தெரு, அனல்யா மருத்துவமனை. வட்ட செயலாளர் சி.தேவராஜ்

2) வட்டம் 98அ, ராமநாதன் தெரு, பெருமாள் கோயில் அருகில், அயன்புரம். வட்ட செயலாளர் K. பாஸ்கர்.

நாள் 13.10.25, திங்கட் கிழமை, 236 ஆம் நாள்

அம்பத்தூர் கிழக்கு பகுதி

1) வட்டம் 82அ, கள்ளிகுப்பம் ஆர்ச் அருகில், அம்பத்தூர். வட்ட துணை செயலாளர், சுபாஷ் சந்திரபோஸ்.

2) வட்டம் 82, 20B பஸ் நிலையம் அருகில், மேனாம்பேடு, அம்பத்தூர் கிழக்கு பகுதி பொருளாளர் E.ராமு

நாள் 14.10.25, செவ்வாய் கிழமை, 237 ஆம் நாள்

துறைமுகம் தொகுதி:

1) துறைமுகம் கிழக்கு பகுதி: ஆச்சாரப்பன் தெரு, தாதா முத்தியப்பன் தெரு சந்திப்பு. வட்ட செயலாளர் R.A.அஸ்லாம்.

2) துறைமுகம் மேற்கு பகுதி:

வட்டம் 54, தங்கசாலை தெரு (அரசு அச்சகம் அருகில்). வட்ட செயலாளர், எம். ஜெய்சங்கர்

மேற்கண்ட காலை உணவு வழங்கும் நிகழ்ச்சியில் திட்ட ஒருங்கிணைப்பாளர்களாக சொ.வேலு, எஸ்.முரளி, ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப் குமார் செயல்படுவார்கள்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.